ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

ஒவ்வொருதினத்திலும் ஸர்வபிராணிகளும் ஸுஷுப்தி அவஸ்தை
யில் தன் ஸொந்தஇடம் சென்று கீழவஸ்தைகளிலனுபவித்த சிரமங்களை
யெல்லாம்விட்டு, ஸுகமாகவேஇருந்தும், இப்படியிருக்கிறோமென்று
தெரிந்துகொள்ளவில்லை. க்ஷேத்திரங்களின் மஹிமைதெரியாதவன் நிதி
யுள்ள க்ஷேத்திரத்தின்மீது ஸஞ்சரித்துக்கொண்டிருந்தும் நிதியின்மேலி
ருக்கிறோமென்று தெரிந்து கொள்ளாமையால் தாரித்திரியத்தையே அனு
பவிப்பது போலவாமிது, என்று சாந்தோக்கியசுருதி போதிக்கிறது. அத
னால் ஸொந்த இடத்திலிருந்து அறியாமையால் வேறுஇடம்வந்தவன்மீண்
டும் ஸொந்தஇடம் செல்லும்பொழுது முன்ஞாபக மிருக்கிறதில்லை யென்
று தோன்றுகிறது, ஆகவே அந்தஸொந்தஇடத்திற்குச் செல்லுகையில்
ஏமாந்துபோகாமல் ஸாவதானமாயிருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது,
அந்த ஸொந்தஇடமென்பது எங்கேயிருக்கிறதென்று தெரிந்துகொள்ள
பிரமாணங்களை ஆராய்ச்சிசெய்தால் அது வெகுதூரத்திலிருப்பதாகவும்,
மிக ஸமீபத்திலிருப்பதாகவும் முண்டகசுருதி கூறுகிறது, எல்லாருக்குமே
அது தூரத்திலிருப்பதாகவும்,ஸமீபத்திலிருப்பதாகவும் கூறுவது விரோத
முடையதாகவிருக்கிறது ஆங்கு அதிகாரிபேதத்தால் விரோதபரிஹாரம்
செய்துக்கொள்ளவேண்டும், அதாவது அதிகமான பாபங்களால் மரம்,
செடி, கொடி, பசு, பக்ஷி, முதலியனவாக ஜனித்தபிராணிகளுக்கு அக்
ஞானமதிகமாக இருப்பதால் அதுகளுக்கு ஸொந்தஇடம் வெகுதூரத்தி
லிருப்பதாகவும், மனுஷ்ய ஜன்மத்தையெடுத்து அதிலும் வேதாதிகாரம்
பெற்று சுருதிஸ்மிருதிகளிற் கூறியவாறு ஸத்கர்மங்களை காமனையின்றி
செய்துவந்தபாக்கியத்தால் பல பாபம்விலக, சித்த சுத்தி பரவைராக்கியம்
பெற்ற மஹானுபாவனுக்கு ஸமீபத்திலிருப்பதாகவும் கொள்ளவேண்டும்,
இக்கருத்து அந்தமுண்டகசுருதி வாக்கியத்திலேயே பின்பாகத்தில்
ஸ்பஷ்டமாகிறது, ஸமீபம்செல்லுகையில் அடிக்கடி தெரிந்தவர்களை விசா
ரிக்கவேண்டும் தானுமூஹித்துக்கொள்ளவேண்டும், அங்கு ஏமாந்துவிட்
டால் ஸொந்தஇடம்சேருவது கஷ்டமாகும், அடிக்கடிவிசாரிக்காமல் வந்
தால் ஒருஸமயம் ஸொந்தஇடத்தைத்தாண்டி வந்துவிடும்படிநேரிடும்,
வடக்கு திக்கிலிருப்பதாக விசாரித்துவந்தவன் ஸமீபத்தில் விசாரிக்காமல்
அதைத்தாண்டி விசாரிக்கும்பொழுது, அங்குள்ளவர் தெற்கேஇருப்பதாகக்
கூறுவார், வடக்கேஎன்றுசொன்னார்கள் இவர் தெற்கேஇருப்பதாகக்கூறு
கின்றாரே! அதுஸரியா? இதுஸரியா? என்று மீண்டும்ஸந்தேகம் வந்து
விடும் வஞ்சித்து இழுத்துக்கொண்டுபோகும் போலிகள் எதிர்பட்டு விசா
ரிக்கப்பட்டால் ஒருவிதமாகக் கலங்கிஇருந்தமனதைப் பலவழிகளைக்
காட்டி ஏமாற்றி கஷ்டப்படுத்திவிடுவார்கள். ஆகையால் ஆனந்தவடிவ
மான ஸொந்தஇடத்திற்கு ஸமீபம் வந்தவனான பிராம்மணன் அந்தவிடம்
செல்ல போலிகள் பேச்சைக்கேழ்க்காமல வர்ணாசிரமதர்மத்தையே நாடி
நன்மையையடைவார்களாக.

சுபம்!

பத்திராதிபர்

# ஆர்ய தர்மம்.

சுக்ல-௵ வைகாசி-௴ ௨௪௨

## பிரஹ்லாதசரித்திரம்.

ஹிரண்யகசிபுவென்ற அஸுரசிரேஷ்டனுக்கு கயாது, வென்ற பாரியையாம், பிரஹ்லாதன் முதலிய நான்குபுத்திரர் களாம், பிரஹ்லாதன் அன்னையின் கர்ப்பத்திலிருக்கும்பொழுது ஹிரண்யகசிபு தனதுமேன்மையைக்கோரி தவம்புரிய வனம்சென்றான், அந்தஸமயம்பார்த்து தேவராஜனான இந்திரன் ஸைன்னியங்களுடன் ஹிரண்யகசிபுராஜ்யம்வந்து அஸுரர்களையடித்துவிரட்டி நாசம்செய்து கர்ப்பிணியான கயாதுஅம்மாளையும் கைதுசெய்து கொண்டுபோகும்வழியில் நாரதமஹாமுனிஎதிர்பட்டு ஓ! தேவராஜனே! இதென்னகாரியம் ஸ்திரீயை வதைசெய்யலாமா? இந்த அம்மாளைக்கட்டி எங்கேஇழுத்துக்கொண்டு போகிறீர்? என்று கேழ்க, அதற்கு தேவேந்திரன் இந்த அம்மாளை வதை செய்வதற்காக நான் கொண்டுபோகவில்லை. ஆனால் இந்த அம்மாளுடைய கர்ப்பத்தில் ஹிரண்யகசிபுவின் கருவிருக்கின்றது. அந்த சிசு வெளிப்பட்டதும் அதை வதைசெய்யக் கொண்டுபோகிறேன். பிறகு இந்த அம்மாளை விட்டுவிடப்போகிறேன் என்று கூறவே நாரதமஹரிஷி அப்படியும் செய்யக்கூடாது. இப்போது அந்த அம்மாளுடைய கர்ப்பத்தில் பாகவதசிரோமணியான பிரஹ்லாதனல்லவா இருக்கிறான். அதனால் அந்த அம்மாளைவிட்டுப் போய்விடும் என்று சொல்லி அந்த அம்மாளைத் தனது ஆசிரமத்திற்குக் கொண்டுவந்து வேண்டிய ஸௌகரியங்களைச் செய்து கொடுத்துக் காப்பாற்றிவந்தார். தினந்தோறும் அந்த அம்மாளுக்கு உபதேசிக்கிற வியாஜமாய் கர்ப்பத்திலிருக்கும் பரமபாகவதனுக்கு பக்தியோகத்தின் பெருமை, அதன் சொரூபம், அதன் பிரிவு, அதன் அதிகாரிகள், அதன் பயன் முதலியவைகளை விஸ்தாரமாக உபதேசித்துவந்தார். கர்ப்பத்திலிருந்த பிரஹ்லாதனும்

அதை ஒன்றுவிடாமல் ஸாவதானமாகக் கேட்டு மனதில் தாரணை செய்துகொண்டார். கர்ப்பத்திலுள்ள சிசுவிற்கு உபதேசத்தைக் கிரஹிக்கும் சக்தியுண்டாவென்று சங்கைசெய்ய இடமில்லை. பிராசீனபாக்கியவசத்தால் கர்ப்பத்திலிருந்து வாமதேவமஹரிஷிக்கு ஸர்வாத்துமபாராம் ஏற்பட்டதாக சுருதியில் காண்கிறபடியால் அதுபோலவே இங்கும் ஸம்பவிக்கலாமல்லவா? கர்ப்பத்தினின்று வெளிப்பட்டபின் பிரஹ்லாதன் வளர்பிறைச்சந்திரன்போல் நாளுக்குநாள் விருத்தியடைந்து கர்ப்பத்திலிருக்கும்போது கிரஹித்துக்கொண்ட பக்தியோகத்தை மனதில் விருத்திசெய்துவந்தான். அஸுரராஜனான ஹிரண்யகசிபுவும் தவம்புரிந்து மற்றவருக்குக் கிடைக்காத வான்பெற்று மீண்டும் தன் ராஜ்யம் வந்து தேவர்களை ஜயித்து முன்னிருந்த பகவத் த்வேஷத்தை ஜாஸ்தியாகச் செய்துவந்தான். பிரஹ்லாதனுக்கு அக்ஷராப்பியாஸம் செய்துவைக்க குலதருவாகிய சுக்கிராசாரியரையழைத்து நல்ல முகூர்த்தம் பார்த்து அக்ஷராப்பியாஸகாலம்முதற்கொண்டே தனது பெருமையையே பெரும்பாலும் கற்றுக்கொடுக்கும்படி சுக்கிராசாரியருக்கு ஆக்ஞைசெய்து அனுப்பினான். அவன் சொன்னதற்காக ஆசிரியர் எவ்வளவு போதித்தும் அவையெல்லாம் பிரஹ்லாதன்மதியிலேறவேயில்லை. நாரதமஹரிஷியால்உபதேசிக்கப்பட்ட பகவத்பக்தியோகமே அவர்மனதில்நிலைகொண்டிருந்தது. எப்பொழுதும் பகவானையே தியானம்செய்வார். மனது வெளிப்படுமாகில் அச்சமயம் யாராவது முன்வந்தால் பகவத் குணங்களை வர்ணிப்பார், ஒருவருமில்லாவிடில் தானாகவே பகவானுடைய நாமங்களைக் கீர்த்தனம் செய்துகொண்டு ஆனந்தப்படுவார். இதனால் பிராசீனவாஸனைக்குத் தக்கவாறாகவே மனுஷ்யர்களுக்குப் பிரவிர்த்தியேற்படும். ஒருவருடைய கலைப்புனல் கலைந்துவிடாது, அதனாற்றான் தற்காலத்தில் பலபேர் பலவிதமாகக் கலைத்தாலும் ஒரே உருதியாக அனேக மஹான் இருக்கிறார்கள். அதனால் வர்ணாசிரமதர்மத்தையே ஆத்மசிரேயஸ்ஸைக் கருதி ஆதரித்துவருகிறார்கள். எல்லோருமே பிரஹ்லாதனைப் போல் உருதியாயிருந்து தர்மத்தைச்செய்து சிரேயஸ்ஸையடைவார்களாக.

சுபம்.

ப—ர்.

# ஸ்ரீ கிருஷ்ணயஜுர்வேதப் பொருளடக்கம்.

ஆஸ்திகசிகாமணிகாள் !

தற்காலம் தேசாந்திரபாஷைகள் அதிகமாக நமது நாட்டில் பாவியிருப்பதால், தாய்பாஷையான ஸம்ஸ்கிருதத்தையே ஆதரிப்பார் குறைந்திருக்கின்றனர். அதிலும் அநேக விதிகளுள்ளதும், ஜன்மாந்தரஸுக்ருதத்தாலும் வைதிகபரம்பரையில் பிறப்பினலும் குருவின் அனுக்கிரஹத்தினலும் கிடைக்கவேண்டிய வேதத்தின் அத்யயனத்தில் விச்வாஸக்குறைவைப்பற்றிச் சொல்லவும்வேண்டுமோ? ஆயிரங்காக்கைகளாயினும் ஓர் கல்லுக்குமுன் நிற்காது போல் எவ்வளவு இதாபாஷைகள் பாவினலும் அதர்மமும், அனுசாரமும் எவ்வளவு மேலோங்கினலும் தர்மரூபியாயும், தர்மத்தைக் கொடுக்கிறதாயும் தானகவே உண்டானதாயுமுள்ள வேதமாதாவை மறைத்துவிடவாவது, வேருகவாவது செய்துவிடவும் முடியாது. "यस्य निश्वसितं वेदाः" என்பதால் ஈச்வரன் மூச்சுக் காற்றை இழந்தாலல்லது வேதநாசம் ஏற்படக்கூடியதல்ல. இதைக்காப்பாற்ற ஆங்காங்கு உத்தமசிலர்கள் தோன்றி அபூர்வமான வேதஸம்ரக்ஷணம் செய்துவருகிருர்கள். அவர்களில் எனது ஜில்லாவாஸியான திருவாமாத்தூர் பிரம்ஸ்ரீ 'மஹாக்னிசித்' யாக தீக்ஷிதர் அவர்களை முதன்மையாகக் குறிப்பிடுகிறேன். அவர்கள் ஷெ க்ஷேத்திரத்தில் "अनश्नन् संहितापारायणम्" உத்தமர்களைக்கொண்டு விதிகமுவாமல் செய்துவைக்கிருர்கள். மற்றும் பலர் வேதத்தை பல துறைகளில் இரங்கி ஸம்ரக்ஷணம் செய்துவருகிருர்கள். நிற்க இவ்வேதத்தில் அடங்கியுள்ளது என்ன? அவைகளின் விநியோகம், பயன் முதலியன என்ன? என்று அறிந்துகொள்ள விருப்பமுள்ளோர்களும் இருப்பார்கள் என்று அவர்களை எண்ணி என் சிற்றறிவிற்கு எட்டினவரையிலும் எழுத முன்வந்தேன்.

இக்காலத்தியவர்கள் நியமத்தைக் காக்கமுடியாமல் எப்படியோ வேதத்தைக்கற்று பதம், கிரமம், ஜடை, கனம், வர்ணக்கிரமம் இவைகளைமாத்திரம் அறிந்து இவைகளினலேயே திருப்தியையடைந்துவிடுகிருர்கள். அதன் அர்த்தவிசாரத்தினல் உண்

டாகிற ஆனந்தத்தைப் பெறமுயற்சிக்கிறார்கள், இல்லை, மற்றும் இன்ன காண்டத்தில் எதன் பிரயோகம் சொல்லியிருக்கிறது? எப்படி அத்யயனம் செய்தால் விதிவழுவாததாயாகும்? அந்த காண்டத்தின் ரிஷி யார்? (ரிஷிகள் அந்தந்த மந்திரங்களை ஞானக்கண்ணால் பார்த்தவர்கள் (श्रुतिं पश्यन्ति मुनयः) என்பதால்) அவர்களைத் தெரிந்துகொள்வதால் நாம் அடையும் விசேஷம் என்ன? என்று கவலைப்படுகிறதுமில்லை. முன்னோர்கள் அந்தந்த காண்டங்களை கிரமாக அத்யயனம் செய்தும் பூர்த்திசெய்தும் அதன் ரிஷியை தர்ப்பணத்தினாலும், ஹோமத்தினாலும், விருந்தினாலும் திருப்திசெய்வித்து தன் ரிஷிகடனைத் தீர்த்துக்கொண்டிருந்தனர். இப்பொழுது அத்யயனம்செய்கிற முறையோ ஸாரஸ்வதபாடத்தைப் பின்பற்றி ஓதப்படுகிறது. அதாவது ஸரஸ்வதியின் குமாரர்கள் தன் தாயின் அநுக்கிரஹத்தால் வேதத்தை தங்கள் இஷ்டப்படி ஓத ஆரம்பித்தார்கள். அதனால் ஒவ்வொரு கிரியைகளுக்கும் தேவையான மந்திரங்களை ஒரேஇடத்தில் கூறப்படவில்லை. யஜுர்வேத ஆரம்பத்தில் इषेत्वा முதல் 13 அநுவாகங்கள் புரோடாசமெனும் ஹவிர்திரவியஸம்பந்தமான மந்திரங்களைக்கூறி அதன் விதிகளை மூன்றாவது அஷ்டகத்தின் 2, 3 பிரச்னங்களால் கூறப்பட்டிருக்கின்றது. இம்மாதிரியே முதல்காண்டம் 7-வது பிரச்னத்தில் எழாமனுவாகம் தொடங்கி 12வரையில் வாஜபேயத்தைக்கூறி, அதன் விதிகளை முதல் அஷ்டகம் 3-வது பிரச்னம் 2முதல் ஒன்பதீருகவுள்ள அனுவாகங்களினால் முறையிடப்பட்டிருக்கிறது. ஸாரஸ்வதபாடரீதியாக காண்டங்கள் 7, அஷ்டகங்கள் 3, ஆரண்யகம், காடகம் இவைகள் நான்கும் மொத்தம் 82 பிரச்னங்கள். இவைகளே அனுஷ்டானபாடரீதியாக 52-காண்டங்களாகப் பிரித்து வரையருக்கப்பட்டிருக்கிறது. அவ்விதமாக ஸ்தோத்திரமும் செய்யப்பட்டிருக்கிறது.

त्रिशीर्षाणं नवात्मानमष्टपुच्छं द्विरंसकम् ।
त्रिंशत्पक्षं समन्विच्छेत् शकुनिं ब्रह्मसंभवम् ॥१॥
उपनिषद्दोस्य शिरोर्कांवंसौ भुवनपतेर्नवयान्यात्मा सः ।
कठविहितानिविदुः पुच्छेष्टौ यदपि च शेषमतस्तौ पक्षौ ॥२॥

காடகத்தில் வேதத்தை பக்ஷியாக வர்ணித்து இருப்பதால் அதைப் பின்பற்றி மேல்கண்ட இரண்டுவசனங்களும் கூறுகிறது. பாப் பிரும்மத்தினிடமிருந்து தோன்றிய வேதபக்ஷிக்கு மூன்றுதைத்தி ரீய உபநிஷத்துகள் சிரஸ்ஸு, ஆக்னிவிதிகாண்டங்கள் இரண்டும் தோள்கள் பிரஜாபதிகாண்டங்கள் 9-ம் ஆத்மா கடரிஷியின் காண் டங்கள் 8-ம், புச்சம் பாக்கியுள்ள 30-ம் இரக்கைகள் என்று கூறி மறுபடியும் விருக்ஷரூபமாய் சொல்லுகிறது. "உபநிஷத்துகள் வேர்கள் பாதங்களாயுள்ள ரிக்குகள் இலைகள் பாதநியமமில்லாத யஜுஸ்ஸுகள் புஷ்பங்களும் தளிர்களும் யக்ஞாதிகர்மாக்களே பலங்களாயிருந்து சோபையைக் குடுத்திருக்கின்றன. வேதியர் களே! ரஸத்தைப்பருகும் வண்டுகள் காயத்ரீமுதலிய சந்தஸ்ஸு கள் அடிமரம் சாகைகளே கிளைகள் இந்த பிரம்மமயமான விரு க்ஷத்தை எந்த வித்யாவானுன வேதியன் அறிவானே அவனே ரிஷி, அளவற்ற கீர்த்தியையடைந்து சுவர்க்கத்தையடைகிறன் என்று பலமும் சொல்லப்பட்டிருக்கிறது.

இம்மாதிரியான வேதத்திற்கு "காண்டாநுக்கிரமணீ" என்று மூன்று அத்தியாயமுள்ள ஓர் சிறு பிரயோகவிளக்க உரையுமு ண்டு. அதில் முதல்அத்தியாயத்தில் 52-காண்டங்களாக வகுக்கப் பட்டு அததன் பெயர்களும் அளவுகளும்கூறி, இரண்டாவது அத் யாயத்தில் காண்டரிஷிகளுக்கு வரையறுத்துச் செப்பிய காண்டங் களும், காண்டரிஷிகளின் நாமங்களையும் விளக்கி, மூன்றுவது அத்யாயத்தில் அத்யயனம் செய்யவேண்டியவிதி, காலம், நியமம்; பகலில் சொல்லவேண்டியது ஆஹாரநியமம், அக்காலத்தில் செய் யவேண்டிய கார்யம் (மிருகாரேஷ்டி, கற்கும்போது மூன்றுநாள் ஸமித்துகள் கொண்டுவரவேண்டியதுபோன்றவைகள்) இச்சாகைக் குள்ள ஆசார்யபரம்பரை வேதஸ்துதி, நியமத்தோடு ஓதுவதால் உண்டாகும்பயன் முதலியவை கூறப்பட்டிருக்கின்றன.

பிராம்மணர்கள் பிரதிதினமும் பிர்ம்மயக்ஞம் எனும் தன் வேதம் ஓதுவதைக் கட்டாயம் செய்யவேண்டுமென்றும், முடியா விடில் கௌணபக்ஷமாக அநேகமார்க்கத்தையுபதேசித்தும் அவர் களை திருப்திசெய்விக்கவேண்டியது முக்கியமானகடமை. இதற்கு பிரமாணவசனமாக,

अथ काण्डऋषीनेतान् उदकाञ्जलिभिश्शुचिः ।
अव्यग्रस्तर्पयेन्नित्यमद्भिः पर्वष्टमीषु च ॥

என்பதால் நித்யமாக ஜலத்தினால் தர்ப்பணம்செய்யவேண்டுமென்றும் சொல்லியிருப்பதால் முன்சொன்ன அனுஷ்டானபாடரீதியான 52-காண்டங்களினால் நாம் தர்ப்பணம்செய்கின்ற காண்டரிஷிகள் பிரீதியடைகிறார்கள். அதன் விவரம்.—

| | | |
|---|---|---|
| பிரஜாபதிகாண்டரிஷிக்கு | 9-காண்டங்கள். | |
| ஸோமகாண்டரிஷிக்கு | 9 | ,, |
| அக்னிகாண்டரிஷிக்கு | 7 | ,, |
| விச்வேதேவகாண்டரிஷிக்கு | 16 | ,, |
| ஸாம்ஹிதீதேவதை உபநிஷத்காண்டரிஷிக்கு | 1 | ,, |
| யாக்ஞிக்யுபநிஷத்காண்டரிஷிக்கு | 1 | ,, |
| வாருண்யுபநிஷத்காண்டரிஷிக்கு | 1 | ,, |
| ஹவ்யவாட்காண்டரிஷிக்கு | 5 | ,, |
| மறுபடி விச்வேதேவகாண்டரிஷிக்கு | 2 | ,, |
| ஸ்வயம்புகாண்டரிஷிக்கு | 1 | ,, |
| மேற்கண்ட ரீதியாக காண்டங்கள் | 52 | |

இவைகள் தவிர ஏகாக்னிகாண்டமெனும் மந்திரப்பிரச்னமும்ஓத வேண்டுமென்று ஸ்மிருதியில் சொல்லுவதால் அதற்கும் மறுபடியும் விச்வேதேவர்களே காண்டரிஷிகள் மதபேதத்தால் தனியாக அருணதேவதை காண்டரிஷியையும் தர்ப்பணம் செய்கிறார்கள். இவ்வித நித்யமான தர்ப்பணங்கள் அநேகவருஷங்கள் குருமுகமாய் வேதாத்யயனம் செய்யவேண்டிய வேதத்தின்பயனை சிலநிமிஷங்களில் கொடுப்பதனாலேயேயும் இதைவிட சுலபஉபாயம் வேறு இல்லாதபடியினாலேயும், மகரிஷிகள் நம்மிடம் இரக்கங்காட்டி செய்திருக்கிற உபகாரத்திற்கு நன்றிசெலுத்தாமலிருப்பது கொடியபாபமென்றும் இனிமேலாவது மஹாக்ரதுக்களைச்செய்து பரமேச்வரனை மகிழ்விக்கச்செய்யமுடியாத மறையோர்வம்சத்திற்

ஞேன்றிய நம்மித்திரரத்னங்கள்யஜுர்வேதத்தையே முழுமையும் ஒருநாளும் ஓதியபலன் கிடைக்கும் நித்யதர்ப்பணமாம் பிரும்ம யக்ஞதர்ப்பணத்தைச் செய்யும்படிக்கும் அதனாலேயே முக்திபர்யந்தமான பலன்கிடைக்கக் காரணமிருக்கிறதென்றும், வேதத்தின் பொருளடக்கமே பிரும்மயக்ஞத்தில் ஓர்புரம் முடிவடைகிறதென்றும் தெரிவித்து இதை முடித்தேன். சுபம்.

கிருஷ்ணயக்ஞ, வி. உமாமகேச்வரசாஸ்திரிகள்.

---

## சங்கரஜயந்தி மஹோத்ஸவம்.

### ராஜாதர்மபாடசாலை, கும்பகோணம்.

சென்ற சித்திரை-மீ 31உ (13—5—29) திங்கட்கிழமை தினம் சங்கரஜயந்தி மஹோத்ஸவம் ஷை பாடசாலை வித்யார்த்திகளால் சிறப்பாக ஷை பாடசாலையில் நடத்தப்பெற்றது. காலையில் 7-30 மணிமுதல் 11-மணி வரையில் ஸ்ரீமத்பகவத்பாதாளுக்கு ஸஹஸ்ரநாமம் முதலிய ஆராதனங்களும் பாஷ்யம் உபநிஷத்முதலிய பாராயணங்களும் நடைபெற்றன. மாலையில் 3:30 மணிக்கு பிரும்மஸ்ரீ சாஸ்திரரத்னகர, யக்ஞஸ்வாமிசாஸ்திரிகள் அவர்கள் அக்ராஸனத்தின்கீழ் மகா-ா-ஸ்ரீ வ. சுப்பிரமணிய அய்யர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் வேதாந்தபாடசாலையில் பிரதான அத்யாபகரான பிரும்மஸ்ரீ ரங்கஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் **ஆசார்ய மகிமை** என்ற விஷயமும் உபன்யஸிக்கப்பட்டது. பிறகு பானகபூஜை முதலியன நன்றாக நடைபெற்றன. அந்த உத்ஸவத்தில் காலையில்நடந்த பூஜை முதலியவைகளுக்கு வழக்கம்போல் திவான் ஸர் சேஷய்யாசாஸ்திரிகள் பௌத்திரரும் ஆஸ்திகசிகாமணியுமான கலியாணசுந்தரசாஸ்திரிகள் பொருளுதவி செய்து ஷை கைங்கர்யத்தைக் கூடஇருந்து நடத்திவைத்தனர். ஷை சாஸ்திரியாருக்கு மேன்மேல் ஆஸ்திகசிரத்தையும் குருபக்தியும் உண்டாகுமாறு கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

வித்யார்த்திகள்,

## "ஸ்ரீ ஆர்யபால ஸமாஜம்" ஸித்தமல்லி.

ஷை ஸமாஜத்தின் ஆதரவில் சித்திரைமீ 31-தேதி (13-5-29) திங்கள்கிழமையன்று ஸ்ரீசங்கரபகவத்பாதாசார்யாளின் ஜன்மோத்ஸவமானது ஊரிலுள்ள பெரியோர்களின் ஒற்றுமையாலும் உதவியாலும், ப்ரம்மஸ்ரீ K. ஸுப்ர்மண்யசாஸ்திரிகளவர்களுடைய அக்ராஸனத்தின்கிழ் ஸ்ரீமான் S. K. வெங்கட்டராமய்யர் அவர்கள் கிருஹத்தில் நடைபெற்றது.

அன்றுநடந்த ஒருஆச்சர்யத்தை இங்குகுறிப்பிடுவது மிகையாகாது. ஷை வெங்கட்டராமய்யரவர்கள் கிருஹத்தில் ஸ்ரீமதாதி ஆசார்யாளுடைய படத்துக்குக் காலையில் பூஜைநடந்தபிறகு மத்யானம் ஷை வெங்கட்டராமய்யரவர்கள் ஆசார்யாள் படத்துக்கு ஸமீபத்தில் சயனித்துக்கொண்டிருந்தார்கள் அதுசமயம், இப்பொழுது நமது காமகோடிபீடத்தை அலங்கரிக்கும் ஸ்ரீ ஆசார்ய மூர்த்தியின் உருவமுள்ள ஒருமஹான் அவ்விடம் ஸ்ரீ ஆசார்யாள் படத்துக்குஎதிரில் உட்கார்ந்துகொண்டு ஜபம்செய்துகொண்டிருந்துவிட்டு பிறகு ஸ்ரீமான் வெங்கட்டராமய்யரைக் கூப்பிட்டு விபூதியளித்து விட்டு ஸ்ரீ ஆசார்யபடத்தை ஒரு பிரதக்ஷிணம்செய்து படத்திலேயே மறைந்ததுபோன்ற ஒருகாக்ஷியை ஸ்வப்னம்போல் கண்டார்கள் அதுகேட்ட ஊரிலுள்ளயாவரும் ஸ்ரீ ஆசார்யாளே நேரில் ஸான்னித்யமானதுபோல் மிக்கப்பரவசமும் ஆசார்யபக்தியையும் அடைந்தார்கள்.

அன்றிரவு ஸ்ரீபரமேசுவரன் ஸ்ரீ ஆதி ஆசார்யாள் இப்பொழுதுள்ள காமகோடிபீடாதிபதிகள் இவர்களதுபடங்களை ஒரு அழகிய விமானத்தில்வைத்து அலங்கரித்து வேதபாராயணத்துடனும் நாகசுரக்கச்சேரியுடனும் கிருஹந்தோறும் நிவேதநம் கர்பூரஹாரத்தியுடனும் ஊர்வலம் விமரிசையாய்நடைபெற்றது பிறகு ஷை வெங்கட்டராமய்யர் கிருஹத்திலேயே ப்ரம்மஸ்ரீ K. சுப்ரமண்யசாஸ்திரிகளவர்களால் ஸ்ரீமதாதி ஆசார்யாளின் சரிதமானது ஸ்ரீசதாசிவப்ரம்மேந்திராளால் செய்யப்பட்ட குருரத்தினமாலிகா

என்னுங் கிரந்தத்தை முக்யமாய்வைத்துக்கொண்டும் மற்றும் பல சங்கரவிஜயங்களை அங்கங்கே அனுஸரித்தும் சென்றஞாயிறன்று வரையில் ஏழுதினங்களுக்கு அழகாக உபன்யஸிக்கப்பட்டது.

தவிர ஷை ஸமாஜத்தின் 5-வது வருஷபூர்த்திக்கொண்டாட்டமானது கடைசி உபன்யாஸதினத்தன்று ப்ரம்மஸ்ரீ K. ஸுப்ரமண்யசாஸ்திரிகளவர்களுடைய தலைமையில் நடைபெற்றது அச்சமயம், ஆலங்காடு ஸ்ரீமான் A. S. விசுவனாதய்யரவர்கள் தற்காலம் ப்ராம்மணவாலிபர்களின்கடமை, என்பதைப்பற்றியும் ஸ்ரீமான் T. K. ஸ்ரீனிவாஸய்யரவர்கள் ஸன்மார்க்கம் அன்பு என்பதைப்பற்றியும் ஸ்ரீமான் சிதம்பரபாரதிகள் கம்பராமாயணத்தில் தாடகைவதம் என்பதைப்பற்றியும் ஸ்ரீசாஸ்திரிகளவர்கள் முடிவில் ஸந்தியோபாஸனத்தின் அவச்யத்தைப்பற்றியும் யாவரும் நன்குணரும்படி எளியநடையிலும் உபன்யஸித்தார்கள் முடிவில் ஸ்ரீஆசார்யாளுக்கு நிவேதனம் கர்பூரஹாராத்திசெய்து ஸபையோர்களுக்கு கற்கண்டு தாம்பூலமளிக்கப்பட்டது.

இப்படிக்கு,
ஸு. வைத்யநாதன்.
காரியதரிசி.

---

# ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷித சரிதம்.

(304-வது பக்கத்தொடர்ச்சி.)

## 27. தெய்வத்தின் கருத்தளித்தல்

வேலூரில் சின்னபொம்மராஜன் தீக்ஷிதமணிகளின் ஸேவையில் ஈடுபட்டிருப்பதைக் கேள்வியுற்ற தஞ்ஜாவூர் நாஸிம்மராஜன் மிக்க ஸந்தோஷங்கொண்டு ப்ருஹதீஸ்வாஸ்வாமியின் மஹோத்ஸவத்தில் ஒரு பெரிய வித்வத்ஸபையை ஏற்படுத்தி நமது தீக்ஷிதாளையும், தாதாசாரியாரையும், மற்றும் அக்காலத்தில் உள்ள ஸகல வித்வான்களையும் அழைத்தான். நாஸிம்மராஜன் ஸாஹித்தியத்தினுள்ள நுட்பமறிந்தவன் அச்சபையை தீக்ஷிதமணிகளின் அக்ராஸனத்தைக்கொண்டே சிறப்பாய் நடத்தி வித்வான்களுக்குச் சம்மானஞ்செய்து அனுப்பினன். ஆனாலும் தீக்ஷிதாளையும், தாதாசாரியாரையும், சிறிதுநாட்கள் தங்கியிருக்கும்படி கேட்டுக்

கொண்டான். அப்போது ஜீர்ணமாயிருந்த ஒரு சாஸ்தாவின் ஆலயத்தைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்து நரஸிம்மராஜன் தீக்ஷிதரோடும், தாதாசாரியாரோடும், சாஸ்தாஸந்நிதிக்கு வந்து, முகவாய்க்கட்டையில் விரலைவைத்து நிற்கும் சாஸ்தாவை உற்றுநோக்கி. இப்படி விரல் வைத்திருப்பதற்கு ஐதிஹ்யமென்ன என்று வினவினபோது ஒரு கிழப்பூசாரி ஒருவன் வணங்கிநின்று வேந்தனே! இதன் கருத்தை ஒரு பண்டிதர் வெளியிடும்போது இந்த விரலை சாஸ்தாநோக வைத்துக்கொள்வார். என்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன் என்றான். அப்போது பக்கத்தில் நின்ற தாத்தாசாரியாரை நரஸிம்மராஜன் அதன் காரணத்தைக் கூறும்படி கேட்கவே அவர்,

**विष्णोः सुतोऽहं विधिना समोऽहं धन्यस्ततोऽहं सुरसेवितोऽहम् ।**
**तथापि भूतेशसुतोऽहमेतैर्भूतैर्वृतश्चिन्तयतीह शास्ता ॥**

நான் திருமாலின் புதல்வன் சதுர்முகனுக்கொப்பானவன். அதனால் தன்யனாகிறேன். வானவர்களாலும் கொண்டாடப்படுகிறேன். ஆயினும் பூதநாதனுக்குப் பிள்ளையாய்ப் பிறந்தேனே என்று பூதங்களால் சூழப்பட்டவராய்க்கொண்டு இங்கு சாஸ்தா சிந்திக்கின்றார்—என்றார். அப்போது அவ்விரல் எடுக்கப்படவில்லை

பிறகு நரஸிம்மராஜன் தீக்ஷிதமணிகளை வேண்டிக்கொள்ளவே அம்மஹான்,

**अम्बेति गौरीमहमाह्वयामि पत्न्यः पितुर्मातर एव सर्वाः ।**
**कथन्नु लक्ष्मीमिति चिन्तयन्तं शास्तारमीडे सकलार्थसिद्ध्यै ॥**

முன்பு அமிழ்தத்திற்காக தேவாஸுரர்கள் போர்புரியும்போது தேவஸஹாயனான மஹாவிஷ்ணு மோஹினிவேஷம் தரித்து தேவர்களுக்கு அமிழ்தபானஞ்செய்வித்து அஸுரர்களை ரூபாதிசயத்தால் மயக்கினார் என்ற சரித்திரம் புராணங்களால் யாவரும் அறிந்ததே. “அக்காலத்தில் மோஹினியினிடம் பரமேசுவரன் மோஹங்கொண்டபோது உண்டாக்கப்பட்டவனானபடியால் பரமசிவனின் பத்தினியான கௌரியை அம்மா என்று அழைக்கிறேன் ஏனெனில் ஒருவருக்கு ஒரு மனைவியினிடம் பிறந்த குழந்தையாயினும் அக்குழந்தைக்கு அவருடைய மற்ற பத்தினிகளும் தாய்மார்களே. லக்ஷ்மியோ சிவனுடையபார்யாஸ்தானத்தையடைந்த

மோஹினிரூபியான விஷ்ணுவின் மனைவி. ஆகையால் லக்ஷ்மி தேவியை என்ன பக்திமுறையால் அழைப்பேன் என்று சிந்திக்கின்ற சாஸ்தாவை ஸகலாபீஷ்டங்களும்ஸித்திப்பதற்கு துதிக்கிறேன் என்றார்கள். உடனே சாஸ்தா விரலை எடுத்துவிட்டார். உடனே அரசன் அவர்களின் புத்திகௌசலத்தைக் கொண்டாடினான். இச்சரிதம் ஸம்ஸ்கிருத காமதேனு என்ற பத்திரிகையில் பிரசுரமாயிருக்கிறது.

## 28. க்ஷேத்திராடனம்,

பிறகு தாத்தாச்சாரியார் நரஸிம்மவர்மாவால் வெகுமானிக்கப்பட்டு வேலூர் சென்றார். நமது தீக்ஷிதாள் க்ஷேத்திராடனத்தில் விருப்பங்கொண்டு நரஸிம்மவர்மாவால் வேண்டிய யாத்திர ஸௌகர்யங்களைப் பெற்றுச்சென்றார். ஆங்காங்குள்ள முக்கியமான சிவஸ்தலம் விஷ்ணுஸ்தலம் முதலானவிடங்களுக்குச்சென்று ஆங்காங்குள்ள சிற்றரசர்களாலும் பெரியோராலும் நன்கு போற்றப்பெற்றார். அந்தந்த க்ஷேத்திரங்களில் ஸ்தோத்திரங்களால் தேவதைகளின் ப்ரஸாதத்தையடைந்தார். தீக்ஷிதாள் சிவவிஷ்ணுக்கள் இருவரையும் ஸமமாகக் கருதினலும் உபாஸனமூர்த்திகளில் சிவபெருமானையே பிரதானமாகக் கொண்டவர். அவர்களுக்கு பேதபுத்தி கிடையாது என்பது அவர்களுடைய இந்த ச்லோகத்தால் நன்கு விளங்குகின்றது.

**वस्तां पिशङ्गं वसनं, दिशोवा गरुत्मता यातु ककुद्मता वा ।**
**निद्रातु वा नृत्यतु वाऽधिरङ्गं भेदं नपश्यामि परस्यवस्तुनः ॥**

"பீதாம்பரனாயினும் ஸரி, திகம்பரனாயினும் ஸரி, கருடவாஹனமேறிச்சென்றாலும் ஸரி, விடபவாஹனமேறிச்சென்றாலும் ஸரி, ரங்கத்தில் (ஸ்ரீரங்க) பள்ளிகொண்டாலும் ஸரி, ரங்கத்தில்(பொன்னபம்) நடனஞ்செய்தாலும் ஸரி, பரம்பொருளின் பேதத்தை அறியேன்."

தீக்ஷிதாளுக்கு சிவமூர்த்திகளின் ஸ்தோத்திரங்களில் **उडुपतिकलाचूड चन्द्रशेखर–चन्द्रलेखावतंस** இம்மாதிரி சந்திரசூடன் என்ற பொருளை விளக்கும் பதங்களைப் பிரயோகிப்பதில் அதிக குதூஹலம். பிருதிவீ, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற லிங்கங்களை **पञ्चरत्नम्** என்ற ஸ்துதியால் விளக்கியிருக்கிறார்கள். அந்த ஸ்தோத்திரத்தை முடிவரையில் எழுதுகிறேன்.

இம்மாதிரி தீக்ஷிதாள் க்ஷேத்திராடனஞ்செய்யும்போது வேலூரில் தாத்தாச்சாரியாருக்கு ஓரளவு மனது களங்கமற்றிருந்தது. க்ஷேத்திராடனஞ்செய்து மறுபடியும் நரஸிம்மராஜனால் வேண்டிய கனகபீதாம்பராதிகளான பொருள்களால் ஸம்மானிக்கப்பட்ட தீக்ஷிதாள் மறுபடியும் வேலூரில் சின்னபொம்மராஜனால் அழைக்கப்பட்டு அங்கு வஸிக்கவே தாத்தாச்சாரியாருடைய மனங்கலங்கிற்று.

இவ்வாறு சிலநாட்கள் செல்லுகையில், தாத்தாச்சாரியார் ஒருஸமயம் 'மஹாராஜாக்கள் மஹாரோகிகளைக்காண்பதுகூடாது' என்ற பிரஸ்தாபம் நேருங்கால் 'மஹாராஜனே! உண்மையாய்ச் சொல்கிறேன். அஸூயை இருப்பதாக எண்ணக்கூடாது. தீக்ஷிதாளுக்கு குணாதிசயங்கள் இருந்தாலும் தீராது நடுக்கஜ்வரம் இருப்பதால் தாங்கள் பழகுவது அநுசிதமே' என்றார். அதன் உண்மையை அரசன் அறிந்துகொள்ளவிரும்பி அம்மஹான் அந்நோயை அனுபவித்துக்கொண்டிருக்கும் ஸமயத்தை பிசுனர்களால் அறிந்து அவர்களின் கிருஹத்திற்குச் செல்லவே, அதை யுணர்ந்த தீக்ஷிதாள், அருகிலுள்ள கிருஷ்ணாஜினத்தில் அந்நோயை தவத்தின்வலியால் ஏவிவிட்டு அரசனுக்குரிய மரியாதை செய்த போது அரசன் வணங்கி பகவானே! தங்களுக்குமுன் தோன்றும் இம்மான்தோல் என் இப்படி உயரக்குதிக்கின்றது. பரமாத்மாவின் ஸன்னிதானத்தில் ஜடன்சேஷ்டை செய்வதுபோல் இது எனக்கு ஆச்சர்யத்தை அளிக்கிறது என்று கேட்டான்.

உடனே நமது தீக்ஷிதாள்

**अयि वत्स तवान्तरङ्गशङ्कापनयन वचिमचिरेण जातु जूर्तिः ।**
**ग्लपयत्यपि चैवमेवमङ्ग प्रतिबन्धो हि तनूभृतां बलीयान् ॥**

"அன்பார்ந்த வத்ஸனே! உனக்குச் சமீபத்தில் நிகழ்ந்த சங்கையையறிந்தே சொல்கிறேன். பூஜ்யனே! இவ்விதமே இக்கொடிய நோய் என்னைப் பீடிக்கிறது. பிராணிகளுக்கு பிரதிபந்தம் பலமுள்ளதல்லவா" என்றனர். அரசன் தகுந்த வைத்தியர்களால் சிகித்ஸைசெய்ய விரும்பவே

**नाभुक्तं क्षीयते कर्म कल्पकोटिशतैरपि ।**

"அனேககோடிகல்பங்களானாலும் பிராரப்தகன்மாவானது அநுபவிக்கப்படாமல் க்ஷயிக்காது" நீ கவலைப்படவேண்டாம். இன்னு

மொரு மாஸத்திற்குள்ளேயே இந்நோய் தீர்ந்துவிடும். நான் அக்கொடிய வியாதியநுபவிப்பதை மஹாராஜா பார்ப்பது உசித மன்று என்றே இந்த அஜினத்தில் ஏவியிருக்கின்றேன் என்று ஸமாதானப்படுத்தி அவனை அனுப்பினர். அரசன் அவர்களின் தபஸ்ஸின் சக்தியை வியந்து பிசுனர்களின் வார்த்தையில் விச்வா ஸம் வைக்கக்கூடாது என்று உறுதிகொண்டான்.

## 29. ஸமாதியில் ஸ்வரூபதர்சனம்.

நமது சரித்திரநாயகரான தீக்ஷிதாள் அநுதினமும் ஏகாந்தத்தில் யோகமண்டபத்தில் யோகாப்பியாஸத்திலிருப்பது வழக்கம். அதைப் பக்கத்தில் பழகுகின்ற பத்தினிக்குக்கூட பார்க்க அநுமதி கிடைத்ததில்லை. வெகுநாட்களாய் சிஷ்யர்களும் வேதாந்த காலக்ஷேபஞ்செய்யும் ஸந்நியாஸிகளும் பார்க்கவேண்டுமென்று ஸமயத்தை எதிர்பார்த்திருந்தனர். ஒருநாள் யாவரும் அந்த யோகாப்பியாஸத்தைக் காண்பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அப்போது தீக்ஷிதாள் மௌனமாயிருந்தார்கள். இது தகுந்த ஸமயம் என்று பதிவிரதாமணியான ஆச்சாளு என்ற பத்தினியும் தனக்கு அதைப் பார்க்கவேண்டுமென்ற அவாவை அறிவித்தாள். தீக்ஷிதாள் அதற்கிசைந்து அந்த யோக நிஷ்டையைப் பார்க்கும்போது பயங்கரமாகத் தோன்றும். ஆச்சரியமாயுமிருக்கும், அதற்கு அஞ்சவேண்டாம். அப்போது ஏற்படும் ரூபத்தின் ஒளி ஸூரியனுடைய ஒளியையும் தாழ்மையாக்கி விடும். இந்த ரஹஸ்யத்தை அறிவாளிகளிடம் வெளியிடுவது நன்மையைப் பயக்கும். விஷமிகளிடம் வெளியிடக்கூடாது. அவர்களிடம் இச்செய்தி சென்றால் அவதூறாகவே சொல்வார்கள். அஃதிருக்கட்டும். இதோ ஒருநாழிகையில் அந்த ரூபத்தைப் பார்க்கப்போகிறீர்கள் என்று யோகாப்பியாஸசாலையில் சென்று சித்தவிருத்தியையடக்கி ச்வாஸபந்தம்பண்ணி பரமாத்மசிந்தனையிலிருந்தார். அப்போது சிஷ்யர்கள் முதலானவர்கள் வாயற்கதவைத் தாப்பாளிட்டு அந்த ரூபத்தைக் கண்கொட்டாமல் பார்க்க ஸஜ்ஜர்களாயினர்.

அப்போது ஓர் பெரிய தேஜஸ்ஸு தோன்றிற்று. அதைப் பார்க்குமிடத்து முன்னொரு ஸமயம் பிரம்மவிஷ்ணுக்களின் விவாதத்தைத் தீர்க்க அவர்களுக்கு முன்தோன்றின தேஜோமண்டலமோ என்று தோன்றும்படி ஆச்சர்யமாயிருந்தது. அத்தேஜஸ்

ஸின் நடுவில் பிரும்மாண்ட கடாஹத்தைச்சுமக்கும் ஆதிசேடன் ஆயிரம்பணாமண்டலங்களுடன் பிரகாசித்தான். அதன் நடுவில் சத்துருஜயத்தால் நிகழ்ந்த கீர்த்தியோவென சங்கிக்கும்படி வெண்மைநிறமுள்ள விபூதியணிந்து, ருத்திராக்ஷமாலை தரித்து, ஓர் திவ்யப்ரகாசமான மூர்த்தி ஜ்வலித்தது. அம்மூர்த்தியின் கா சரணங்களில் நககிரணங்களைப்பார்க்கும்போது, மதுகைடபர்களை நகங்களால் கிழித்த உத்திரக்ஷணத்தில் தென்படுகிற திருமாலோ வென ஊஹிக்கும்படியிருந்தது. அவ்விதமான சிவந்த நகங்க ளோடு கூடியும் அச்சத்தைத் தாக்கூடியதுமான அந்த ஸ்வரூபம் பூர்ணமாய் பிரகாசித்தது. ஸித்தாஸனத்திலமர்ந்த அந்த ஸ்வரூ பம் அதிகமான ஆச்சர்யத்தையும் விச்வாஸத்தையும் அவர்களுக்கு உண்டாக்கியது. அதனால் முதலில் தோன்றின அச்சத்தை ஸமா தானப்படுத்திக்கொண்டு கண்கொட்டாமல் சிலர் உற்றுநோக்கி னர். அந்த ஒளி அவர்களுடைய கண்ணைப்பூர்ணமாகப்பார்த்து அனுபவிக்கவொட்டாமல் தடுத்தது. அதனால் கண்களை மூடிக் கொண்டனர். முடிவில் யாவரும் தைர்யமடைந்து அவர்களிடத் தில் மனிதன் என்ற எண்ணத்தைநீக்கி பதஞ்ஜலியோடுவிளங்கும் பொன்னம்பலத்தரசனான நடராஜனே என்று உறுதிகொண்டு துதித்தனர்,

## 30. ஆத்மஞ் ஞானோபதேசம்.

உடனே தீக்ஷிதாள் ஸமாதியைக் கலைத்து கருணையுடன் சிஷ்யர்களையும் மற்றவரையும் பார்த்து அனுக்கிரஹித்து விபூதி தந்தருளினர். வடமூலவாஸியான தக்ஷிணாமூர்த்திபோல் அவர் களுக்கு ஐயந்திரிபற வேதாந்தஸாரத்தையும் விளக்கினர்.

சுருதிஸ்மிருதிகளால் விதிக்கப்பட்ட கன்மாக்களைச் செய்து பயனைவிரும்பாமல் ஈசுவரார்ப்பணம் செய்தால் மனது நிர்மலமாய் அஞ்ஞானம் நீங்கி ஆத்மஸாக்ஷாத்காரமேற்படும். ஜனனமரண பிரவாஹ ரூபமாய் சக்கிரம்போல் சுழல்கின்ற இந்த ஸம்ஸாரபந் தத்தைத் தொலைக்க, இம்மானிடப் பிறவியே தகுந்த ஸாதனம். இரவும், பகலும், சந்திரனும் ஸூரியனும்தோன்றி பிரும்மனால் லலாடத்தில் ஏற்படுத்தியிருக்கிற ஆயுளையபகரித்துகொண்டிருக்கி றார்கள். ஆகையால் கணநேரத்தையும் வீணாக்காமல் ஈசுவர தியானத்திலும், ஈசுவராக்ஞையான சுருதிஸ்மிருதிகளிலும் ஈடு

படவேண்டும். சிறுவர்களைப்போல் அறிவாளிகளும் காலம்வீணாகக் கழிவதைக் கவனிக்கிறதில்லை. விபூதியை தரித்து ருத்ராக்ஷமாலையை அணிந்து, குருவந்தனம், லிங்கபூஜை, அக்னிஹோத்திரம், முதலான கன்மாக்கள் இவைகளை சிரத்தை பக்தியுடன் செய்து ஈசுவரார்ப்பணம் செய்தே முன்னோர் பேரின்பமடைந்திருக்கின்றனர். ஜன்மாந்தர ஸஞ்சிதங்களான புண்ணிய பாபங்கள் பயனைக் கொடுக்கத்தொடங்கிவிட்டால் ப்ராரப்தங்கள் எனப்படும். அவை ஞானியையும் விட்டு விடுகின்றதில்லை. ஆனால் அவை அஞ்ஞானியைத் துக்கப்படுத்துகிறதுபோல் ஞானியைத் துக்கப்படுத்துகிறதில்லை. இல்லறத்தை நடத்தி பின்பு வைராக்யமடைந்து ஸந்நியாஸியான உத்தமனுக்கு பூர்வாச்ரமத்தைச் சார்ந்த வீடு அக்கினிக்கு இரையானால் எவ்வாறு அதில் துக்கம் நிகழாதோ அதுபோலவே என்று சாஸ்திரங்கள் போதிக்கின்றன. ஞானியிடம் ஆகாமி, ஸஞ்சிதம் என்னும் கன்மாக்கள் ஒருவிதமானக்லேசத்தையும் உண்டாக்காது. அறிவுச்சுடர் அக்கன்மாக்கள் யாவையும் சாம்பலாக்கி விடுகின்றது.

अन्योसावहमन्यइत्यशुचिधीर्यो वा न वेदैवत-
देवानां स पशुश्चिरं भवति तद्ब्रह्मात्मबुद्धिर्भवेत् ।
एकत्वं परिपश्यतः कइह शुङ्मोहादिरित्याहहि
प्रायःस्वान्तहृषीकगोचरमिदं सर्वात्मनैवास्म्यहम् ॥

யாதொருவன் தன்னைக்காட்டிலும் வேறுஆத்மா இருப்பதாகநினைத்து, அதை ஸ்துதி நமஸ்காராதிகளால் உபாஸிக்கிறானோ அவன் தன்னை அநாத்மாவாகவும், அதிகிருதனாகவும், கருதுகிறபடியால் அவன் ஆத்மஞானம் பொராமலிருப்பதோடு, தேவர்கசளுக்குப்பசுவாக ஆகிறான். எப்படி பசுவானதுபால்கறப்பது முதலானவிதங்களாக உபயோகிக்கப்படுகிறதோ அப்படி பேதபுத்தியுள்ளவன்யக்ஞாதிகன்மாக்களால் தேவர்களுக்கு உபயோகப்படுகிறபடியால் பசுவாகிறான், அவன் ஞானியாய்விட்டால் அபேதமாகபாவித்துவிடுவான். தங்களது ஹவிர்பாகங்கள் குன்றிவிடும் என்று அவனைமோக்ஷமடையச்செய்ய தேவர்கள் பிரியப்படுகிறதில்லை. (தொடரும்)

K. V. சுப்பிரமணியசாஸ்திரி.